**காரைக்குடி நகராட்சி**

**02.11.2020 ம் தேதி காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சிறப்பு கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை: திரு.க.ரெங்கராசு, ஆணையர்(பொ) மற்றும் தனிஅலுவலர்(பொ)**

**மன்றப் பொருட்கள்**

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
|---|---|---|---|
| 02.11.2020 | 1 | 184. காரைக்குடி நகராட்சியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப் பணியினால் சேதமடைந்துள்ள சாலைகளை மேம்பாடு செய்து புதிதாக தார்ச்சாலை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்திட ரூ.11.00 கோடிக்கு கீழ்க்கண்டவாறு விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளன. இப்பணிகளை மேற்கொள்வதற்கு சிறப்பு சாலைகள் திட்டம் 2020-2021ன் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பிவைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்.184 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
|---|---|---|---|
| | | | |

| Sl.No | Name of the Road | Length (in km) | | Width (in m) | Estimate amount (Rs.in Lakh) |
|---|---|---|---|---|---|
| | | B.T | Paver Block | | |
| 1 | Providing BT surface using Paver machine at ward No :12 Gandhipuram 1st, 2nd, 3rd, 4th, and cross street, ward No :15 Ansari street | 1.950 | --- | 4.50 | 110.00 |
| 2 | Providing BT surface using Paver machine at ward No :17 Vadivel Anbalam Layout main street and cross street, andward No :18 Kurichi kanmoi street. | 2.150 | --- | 4.50 | 120.00 |
| 3 | Providing BT surface using Paver machine at ward No :19 Soodamanipuram Velu nachiyar street, Sembaruthi street, Mullai street and Cross street, kannadhasan Main street ( MG Road to Park). | 2.700 | --- | 4.50 & 6.00 | 165.00 |
| 4 | Providing BT surface using Paver machine at ward No : 19 Samiyar Madam main street and cross steets , Soodamanipuram Batmitton Ground and vivegananthar street and Cross street | 2.250 | --- | 4.50 | 126.00 |
| 5 | Providing Paver block road at ward No :1 Kalanivasal Vadakku oorani Cross Street, and pillayar kudam street, Vairavan ambalam street, ward No :2 Bharathidhasan 1st, 2nd and Cross streets, ward No :5 NSK Street | --- | 1.950 | 3.00 & 3.50 | 100.00 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | Providing Paver block road at ward No.5 Majeeth street, Chidhambaram street, Bharathiyar 1st and 2nd Street and periyar East-West road, ward No.10 Pranmalai Ravuthar and cross streets | --- | 2.250 | 3.50 | 130.00 | | |
| | | | 7 | Providing Paver block road at ward No.14 Gangatharar street , pallivasal street, Muthuoorani mudakku lane, ward No.15 Sundaram lane , TVKS lane, Marakkadai lane, Krishnan lane, Karpaga vinayagar lane. | --- | 2.150 | 3.00 & 3.50 | 116.00 | | |
| | | | 8 | Providing Paver block road at ward No.27 AVPL Street & ward No.35 Pappa oorani street ,Cross streets , Valluvar street and Muncipal street | --- | 2.200 | 3.50 | 128.00 | | |
| | | | 9 | Providing Paver block road at Ward No.24 , Subramaniya Siva lane and cross streets, ward No.34 Vaithiyalingapuram Main street and Cross streets,ward No.35 Nachuriyenthal, and Cross streets. | --- | 1.950 | 3.00 & 3.50 | 105.00 | | |
| | | | | **Sub -Total** | **9.050** | **10.500** | | | | |
| | | | | **Grand Total** | **19.550** | | | **1100.00** | | |

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
|---|---|---|---|
| 02.11.2020 | 1 | அலுவலகக்குறிப்பு:<br>மேற்கண்ட மதிப்பீடுகளை அங்கீகரிக்கலாம். மேற்கண்ட திட்ட மதிப்பீட்டில் 90% தொகையினை சிறப்பு சாலைகள் திட்டத்தின்கீழ் நிதி பெற்றும் மற்றும் மீதமுள்ள 10% தொகையினை அரசு அங்கீகாரம் பெற்ற நிதி நிறுவனத்திலிருந்து கடனாக பெற்றும் பணியினை செய்து முடிக்க அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.184**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்
காரைக்குடி நகராட்சி

**காரைக்குடி நகராட்சி**
**02.11.2020 ம் தேதி காலை 11.30 மணிக்கு நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**
**தலைமை: திரு.க.ரெங்கராசு, ஆணையர்(பொ) மற்றும் தனிஅலுவலர்(பொ)**
**மன்றப் பொருட்கள்**

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
|---|---|---|---|
| 02.11.2020 | 1 | **185.** இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறு எண்.1ல் உள்ள 15 எச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார் பம்ப் பழுது பணிக்கு 12.10.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. M/S.பாரதி எலெக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி - ரூ.19,466/-<br>2. ஸ்ரீ கணேஷ் எலெக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ் காரைக்குடி - ரூ.20,390/-<br>3. ஸ்ரீ சுந்தரம் எலெக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ் காரைக்குடி - ரூ.20,270/-<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/S.பாரதி எலெக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளவும் செலவுத் தொகை ரூ.19,466/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அ) குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.185 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 2 | 186. இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறு எண்.7ல் உள்ள 20 எச்.பி நீர்மூழ்கி மின் மோட்டார் மற்றும் பம்ப் பழுது நீக்கம் பணிக்கு அங்கீகாரம் பெற்ற DECCAN INDUSTRIES கோவை நிறுவனத்திடமிருந்து ரூ.27140/-க்கு விலைப்புள்ளி வரப்பொற்றுள்ளனது. அதன்படி DECCAN INDUSTRIES, கோவை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கிடவும், மேற்கண்ட செலவுத் தொகைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம். | **தீர்மான எண்.186 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 02.11.2020 | **3** | 187. இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள 40KVA ஜெனரேட்டர் பழுதாகி இயக்க முடியாமல் உள்ளதால் புதிதாக பேட்டரி சப்ளை செய்திடும் பணிக்கு 20.10.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. M/Sபாலாஜி பேட்டரி ஏஜென்சீஸ், காரைக்குடி - ரூ.12,100/-<br>2. M/Sஸ்ரீ வெங்கடேஸ்வரா எண்டர்பிரைசஸ், காரைக்குடி - ரூ.12,600/-<br>3. M/Sசத்யாசாய் எண்டர்பிரைசஸ், காரைக்குடி - ரூ.12,950/-<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/Sபாலாஜி பேட்டரி ஏஜென்சீஸ், காரைக்குடி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அ) குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>ஆ) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.187 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | **4** | 188. காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் அனைத்து போக்குவரத்து வாகனங்களுக்கு செலுத்த வேண்டிய பசுமைவரிக்கான தொகை ரூ.39,374/-க்கு திரு.எ.சிவகுருநாதன், ஓட்டுநர் பேரில் காசோலை 27.03.2020ம் தேதியன்று வழங்கப்பட்டது. ஆனால், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 12.05.2020ல் தொகை செலுத்தும்போது ரூ.41865/- செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டதால் கூடுதல் தொகை ரூ.2491/- (41865-39374) திரு.எ.சிவகுருநாதன் ஓட்டுனரால் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகை ரூ.2491/-ஐ அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2304/2020/எச்1) | **தீர்மான எண்.188 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 02.11.2020 | **5** | 189. இந்நகராட்சி வார்டு எண்.34 வைத்தியலிங்கபுரம் கோனார் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணறு 10 எச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார் பம்ப் பழுது பணிக்கு 20.10.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. M/Sபாரதி எலெக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி - ரூ.21,650/-<br>2. ஸ்ரீ கணேஷ் எலெக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ் காரைக்குடி - ரூ.23,010/-<br>பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/Sபாரதி எலெக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளவும் செலவுத் தொகை ரூ.21,650/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அ) குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.189<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |
| | **6** | 190. இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறு எண்.8ல் உள்ள 15 எச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார் பம்ப் பழுது பணிக்கு 23.10.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. M/Sபாரதி எலெக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி - ரூ.17,956/-<br>2. ஸ்ரீ கணேஷ் எலெக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ் காரைக்குடி - ரூ.18,960/-<br>3. ஸ்ரீ சுந்தரம் எலெக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ் காரைக்குடி - ரூ.18,680/-<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/Sபாரதி எலெக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளவும் செலவுத் தொகை ரூ.17,956/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அ) குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.190<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 02.11.2020 | 7 | 191. காரைக்குடி நகராட்சியில் மத்திய, மாநில அரசு நிதியின் கீழ் பல்வேறு திட்டப்பணிகள் அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. | **தீர்மான எண்.191 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | MICRO COMPUTER CENTRE | மக்கும் குப்பைகளை உரமாக்குதல் | 325.00 |
| 2 | BIO-MINING | நுண்ணுயிர் மையம் | 737.00 |
| 3 | KFW(WATER BODIES) SCHEME 2018-2019 | ஊரணி மேம்பாட்டு திட்டம் | 396.00 |
| 4 | IUDM 2018-2019 | சாலைப் பணிகள் | 1992.70 |
| 5 | CAPITAL GRANT FUND 2019-2020 | தூய்மை பணியாளர்கள் குடியிருப்பு | 300.00 |
| 6 | TURIP 2019-2020 | சாலைப் பணிகள் | 1000.00 |
| 7 | 14$^{TH}$ FINANCE COMMISSION 2019-2020 | சாலைப் பணிகள் | 317.00 |

மேற்கண்ட திட்டப்பணிகளை தவிர்த்து பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், நீர்நிலைகள் மேம்பாடு பணிகள் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணியினால் சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைத்து புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரி அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

மேற்கண்டவாறு நடைபெறும் திட்டப்பணிகளை கண்காணித்திடவும் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது உயர் அலுவலர்களால் நடத்தப்படும் ஆய்வுக் கூட்டத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பித்தல், புகைப்படங்கள் எடுத்து அதில் பணியின் பெயர் தட்டச்சு செய்து அனுப்புதல் மற்றும் அவ்வப்போது கோரப்படும் திட்டப்பணிகளுக்கு கருத்துருக்கள் தயார் செய்தல் போன்ற பணிகளை செய்திட உதவிப் பொறியாளர் ஒருவர் மட்டும் உள்ளதால் அவருக்கு உதவியாக கணிணி தட்டச்சு மற்றும் AUTOCAD தெரிந்த ஒரு நபரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை அடிப்படையில் OUTSOURCING முறையில் பணிக்கு அமர்த்திக் கொள்ளவும், அதற்காக 85 நாட்களுக்கு (நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி 2021) உத்தேச செலவுத் தொகை ரூ.40,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| | **8** | 192. இந்நகராட்சி குடிநீர் வாகனம் எண்.TN63 T 2437 வாகனத்திற்கு தகுதி சான்று பெற பழுது பணிக்கு 27.10.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. M/Sபாலமுருகன் ஆட்டோ சர்வீஸ், காரைக்குடி - ரூ.39,600/-<br>2. ஸ்ரீ கல்கி சர்வேஸ்வரன் ஆட்டோமோட்டிவ் ஒர்க்சாப், தேவாகோட்டை - ரூ.39,750/-<br>3. கிளாசிக் மோட்டார்ஸ், தேவகோட்டை - ரூ.39,900/-<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/Sபாலமுருகன் ஆட்டோ சர்வீஸ், காரைக்குடி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளவும் செலவுத் தொகை ரூ.39,600/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அ) குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.192**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | **9** | 193. இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டுக் குத்தகை இனங்கள் பல்வகைக் கட்டணம் வசூல் செய்யும் உரிமங்களான 1. மகர்நோன்பு பொட்டலில் இயங்கி வரும் நகராட்சி விறகு வைக்கோல் வகையறா விற்பனை செய்யும் நாட்களில் கட்டணம் வசூல் உரிமம் மற்றும் மேற்படி பேட்டையில் விழும் சாணக் கழிவுகளை எடுத்துக்கொள்ளும் உரிமம் 2. இராஜாஜி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள டூரிஸ்ட் டாக்ஸி நிறுத்தத்தில் நிற்கும் வாடகை கார் மற்றும் வேன்களுக்கு தினசரி கட்டணம் வசூல் உரிமம். 3. 100 அடி சாலை மற்றும் கல்லூரி சாலையில் நிற்கும் வாடகை கார் மற்றும் வேன்களுக்கு தினசரி கட்டணம் வசூல் உரிமம் ஆகிய இனங்களுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பலமுறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி மூன்று இனங்களுக்கும் எவரும் ஏலம் கோர முன்வராததாலும், மேற்கண்ட இடத்தில் வாகனங்கள் நிறுத்தவில்லை என வருவாய் ஆய்வர் வடக்கு மற்றும் தெற்கு அவர்களின் ஆய்வின் போது தெரிய வந்ததாக குறிப்பு வழங்கியதன் பேரில் மேற்கூறிய மூன்று இனங்களையும் ஏல அட்டவணையில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4665/2019/அ1) | **தீர்மான எண்.193**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |

ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்
காரைக்குடி நகராட்சி

காரைக்குடி நகராட்சி
30.11.2020 ம் தேதி காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்
தலைமை: திரு.க.ரெங்கராசு, ஆணையர்(பொ) மற்றும் தனிஅலுவலர்(பொ)
மன்றப் பொருட்கள்

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
|---|---|---|---|
| 30.11.2020 | 1 | 194. காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் குப்பை அள்ளும் வாகனங்களுக்கு கீழ்க்கண்டவாறு இன்சூரன்ஸ் தொகை ரூ.66,300/-ஐ செலுத்த வேண்டியுள்ளது. அதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. TN63 AT 7828 - RS35,307/-<br>2. TN63 U 9666 - RS30,993/-<br>--------------<br>RS66,300/-<br>--------------<br>அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2584/2020/எச்1) | தீர்மான எண்.194<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>2</td>
<td>195. காரைக்குடி நகராட்சியில் 2020-2021 நிதியாண்டிற்கான இவ்வலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிண்டர்களின் கேட்ரேஜ் ரீபிள் செய்யும் பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டது. கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>S.No</th><th>Particulars</th><th>Nos</th><th>Arul Computers</th><th>Karai Computers</th><th>EFF One Solution</th></tr>
<tr><td>1</td><td>HP 12A Toner Refilling</td><td>10</td><td>6500</td><td>8000</td><td>7000</td></tr>
<tr><td>2</td><td>HP 35A Toner Refilling</td><td>10</td><td>6500</td><td>8500</td><td>6500</td></tr>
<tr><td>3</td><td>HP 88A Toner Refilling</td><td>10</td><td>6500</td><td>8000</td><td>6800</td></tr>
<tr><td>4</td><td>HP 28A Toner Refilling</td><td>5</td><td>4750</td><td>5000</td><td>5250</td></tr>
<tr><td>5</td><td>Samsung 3310 Toner Refilling</td><td>5</td><td>4750</td><td>5000</td><td>4750</td></tr>
<tr><td></td><td>Total</td><td></td><td>29000</td><td>34500</td><td>30300</td></tr>
</table>
மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய அருள் கம்ப்யூட்டர்ஸ், 2/4-1 பி.எஸ்.ஆர்.காம்ப்ளக்ஸ், 100 அடி ரோடு, அழகப்பாபுரம், காரைக்குடி நிறுவனத்தில் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ஆ) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்.195<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td></td>
<td>196. அரசு ஆணை எண்.273 வருவாய் மற்றும் பேரிடரி மேலாண்மை துறை நாய் 04.06.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் க.ந.க.எண்.12635/2020/யுபிஏ3 நாள் 28.08.2020ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கு இணங்க காரைக்குடி நகராட்சிக்கு உட்பட்ட 36 வார்டுகளிலும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு விரிவான விபத்து காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்திட பயனாளிகள் குறித்த கூடுதல் விவரங்கள் கணக்கெடுப்பு செய்திடும் பணிக்கு படிவங்கள் மற்றும் எழுது பொருட்கள் உபகரணங்கள் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
1. மேற்காணும் செலவினம் ரூ.2.00 இலட்சம் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. அவசரம் அவசியம் கருதி ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் மேற்காணும் படிவங்கள் தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட், திருச்சி நிறுவனத்தில் அச்சடிப்பதற்கும் அதற்கான பணி உத்தரவு வழங்கியதற்கும் தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.758/2020/எச்2)</td>
<td>தீர்மான எண்.196<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

197. இந்நகராட்சியில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு அரசாணை நிலை எண்.666 நிதித் (சம்பளக்குழு) துறை நாள் 27.06.1989ன்படி 5வது ஊதியக்குழு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு 01.06.1988 முதல் 31.05.1989 வரை உள்ள காலத்திற்கான நிலுவைத் தொகை சேமநலநிதிக் கணக்கில் வைக்கப்பட்டது. நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு 5வது ஊதியக்குழு நிலுவைத் தொகையை ஓய்வுபெற்ற நாள் வரை வட்டியுடன் வழங்க அரசாணை நிலை எண்.351 நிதி (சம்பளக்குழு) துறை நாள் 13.08.2008ல் உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் பணிபுரிந்து பணி நிறைவு பெற்றவர்களுக்கு அவர்கள் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பெயர் (ம) பதவி | ஓய்வு நாள் | தொகை | வட்டித் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | கே.எஸ்.சிவக்குமார் துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 30.04.2019 | 3010 | 44582 | 47592 |
| 2 | வி.ஆர்.ராஜேந்திரன் , துப்புரவு பணி மேற்பார்வையாளர் | சு.வி.ஓ 30.04.2015 | 2626 | 27614 | 30240 |
| 3 | கே.ரஹிம், அலுவலக உதவியாளர் | 31.12.2015 | 2210 | 24759 | 26969 |
| 4 | எம்.வேலுச்சாமி இளநிலை பொறியாளர் | 30.10.2010 | 2629 | 18325 | 20954 |
| 5 | எஸ்.ஏ.அப்துல்கலாம்ஆசாத் வருவாய் உதவியாளர் | 31.03.2018 | 1886 | 25532 | 27418 |
| | மொத்தம் | | 12361 | 140812 | 153173 |

மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு தொகை ரூ.153173/-ஐ வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2826/2019/பி4)

**தீர்மான எண்.197**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

198. இந்நகராட்சியில் நடைபெற்று வரும் 2016-2020 வரையிலான திட்டப்பணிகள் தினத்தந்தி நாளிதழில் 25.10.2020ல் விளம்பரம் செய்தமைக்கான தொகை ரூ.41,580/- வழங்கிடக் கோரி தினத்தந்தி நாளிதழில் இருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன்படி பட்டியலில் கண்டுள்ள தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.198**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

| | | | |
|---|---|---|---|
| | | . 199. காரைக்குடி நகராட்சி பகுதியில் உள்ள 36 வார்டுகளிலும் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத பகுதியாக நடுவன் அரசின் ஆய்வுக்குழுவால் ஆய்வு செய்யப்பட்டு 12.05.2017 அன்று திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத நகராட்சி என்று அறிவிக்கப்பட்டது. மேலும் கீழ்க்கண்ட ஒவ்வொரு ஆறுமாத காலத்திலும் 26.12.2017, 20.07.2018, 05.12.2019 ஆய்வு செய்யப்பட்டு திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத நகரமாக அறிவிக்கப்பட்டு, செயல்பட்டு வரப்படுகிறது. தற்போது இதனை மேம்படுத்தி ODF PLUS மற்றும் 3 STAR சான்று பெறவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை நாள் 27.10.2020 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை நாள் 17.10.2020 அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றது. அதன்படி சான்று பெறுவதற்கும் இந்நகர் பகுதி மக்களுக்கு நாளிதழ் அறிவிக்கை செய்யவும், இச்சான்று பெறுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை செய்வதற்கும் உத்தேச செலவினம் ரூ.50,000/- ஆகும் இதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4542/2020/எச்1) | **தீர்மான எண்.199**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | | 200. காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு தடுப்பு தொடர் நடவடிக்கைகாக வாங்கப்பட்ட 10 புகை தெளிபானில் மூன்று (3) தெளிப்பான் மட்டுமே இயங்குகிறது. மற்ற இயங்காத 7 தெளிப்பான் கீழ்க்கண்ட விவரப்படி பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளது.<br>1. வாகனத்துடன் இயங்க கூடிய புகை மருந்து இயந்திரம் – 1<br>2. PULSE FOGGING MACHINE - 2<br>3. INDOOR FOGGING MACHINE - 4<br>ஆக மொத்தம் - 7<br>மேற்கண்ட விவரப்படி 7 இயந்திரம் பழுது சீர் செய்ய உத்தேச செலவினம் ரூ.25,000/- ஆகும். இதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.200**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | 201. காரைக்குடி நகராட்சி வார்டு எண்.8, பிளாக் எண்.2, நகரளவு எண்.152/2C, 167/3, 168ல் 258.32 ச.மீ பரப்பளவு இடத்தில் வணிக உபயோக கட்டிடம் கட்ட அனுமதி வேண்டி திரு.வீ.லெட்சுமணன் என்பவர் வரைபடம் மற்றும் ஆவணங்களுடன் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார் மேற்கண்ட இடத்திற்கு A முதல் I என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும் அம்மனையில் ஸ்டில்ட்தளம் மற்றும் இரண்டு தளங்கள் 534.74 சமீ பரப்பளவு கொண்ட உத்தேச வணிக கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களின் கடிதம் ந.க.எண்.186/2020/சிமா-2 நாள் 03.11.2020ல் க.வ/ந.ஊ.து.இ (சிமா) எண்.03/2020 என எண்ணிட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மேற்கூறிய கட்டிடத்திற்கு இறுதி ஒப்புதல் வழங்க உள்ளூர் திட்ட குழும அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>இறுதி ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.2732/2020/எப்2) | **தீர்மான எண்.201**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | | 202. இந்நகராட்சியின் 36 வார்டுகளில் குரங்குகள் தொல்லை அதிகமாக இருப்பதாக புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. எனவே, பொதுமக்களுக்கு இடையூறு செய்யும் குரங்குகளை பிடித்து காட்டுப் பகுதிக்குள் விடுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4837/2020/எச்1) | **தீர்மான எண்.202**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
|---|---|---|---|
| | 10 | 203. இந்நகராட்சிக்கு தேவையான கீழ்காணும் எழுது பொருள்கள் விநியோகம் செய்வதற்காக கீழ்காணும் நிறுவனத்தின் மூலம் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் ராஜா பேப்பர் ஸ்டோர் நிறுவனத்தில் குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண்.203<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை | V.S TRADERS | CHOZHA TRADERS | RAJA PAPER STORE |
|---|---|---|---|---|---|
| 1 | TIN TAG | 50 | 950 | 1000 | 762.71 |
| 2 | PENCIL BOX | 13 | 598 | 611 | 522.32 |
| 3 | STAPLER PIN NO10 | 24 | 216 | 240 | 162.71 |
| 4 | STAPLER PIN 24*6 | 12 | 216 | 228 | 172.88 |
| 5 | PEN RS5 | 55 | 275 | 253 | 196.43 |
| 6 | PEN RS5 RED | 40 | 200 | 184 | 142.86 |
| 7 | PEN RS5 BLACK | 45 | 225 | 207 | 160.71 |
| 8 | THREAD SIMCO | 17 | 697 | 714 | 647.62 |
| 9 | NEEDLE | 17 | 102 | 93.50 | 72.03 |
| 10 | STAPLER NO10 | 10 | 460 | 455 | 381.36 |
| 11 | STAPLER HP 45 | 7 | 1694 | 1687 | 1423.73 |
| 12 | GUM BOTTLE 300 ML | 10 | 410 | 420 | 338.98 |
| 13 | ERASER RS5 | 7 | 35 | 35 | 30 |
| 14 | MARKER PERMANENT | 8 | 168 | 176 | 142.86 |
| 15 | STAPLER HEAVYDUTY & GUNTRACKER | 1 | 3550 | 3525 | 2966.10 |
| 16 | SEALING WAX | 4 | 56 | 60 | 44.07 |
| 17 | BELL PIN BOX 26MM | 9 | 324 | 333 | 266.95 |
| 18 | RUBBER BAND RS15 BOX | 5 | 55 | 60 | 44.64 |
| 19 | RUBBER BAND PKT | 10 | 460 | 470 | 401.79 |
| 20 | POST IT | 14 | 504 | 518 | 415.25 |
| 21 | STAMP PAD | 8 | 328 | 336 | 271.19 |
| 22 | STAMP PAD INK VIOLET | 5 | 255 | 260 | 223.21 |
| 23 | WRITING PAD | 5 | 830 | 850 | 699.15 |
| 24 | CALCULATOR | 10 | 3720 | 3750 | 3135.59 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | STAPLER PIN 23*8 | 1 | 37 | 38 | 30.51 |
| 26 | PEN UNI BALL | 20 | 1220 | 1240 | 1071.43 |
| 27 | NOTE 1Q FS | 10 | 910 | 950 | 803.57 |
| 28 | CARBON SHEET BOX | 1 | 192 | 195 | 161.02 |
| 29 | STAPLER REMOVER | 1 | 51 | 55 | 42.37 |
| 30 | GUM BOTTLE 700ML | 7 | 434 | 455 | 355.93 |
| 31 | FILE PAD SPL | 20 | 620 | 640 | 508.43 |
| | GST | | 0 | 0 | 1338.52 |
| | SGST | | 0 | 0 | 1338.52 |
| | TOTAL | | 19792 | 20038.50 | 19275.00 |

அலுவலகக்குறிப்பு:

அ) குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3392/2019/பி3)

| | | | |
|---|---|---|---|
| | **11** | 204. இந்நகராட்சியில் வார்டு எண்.30ல் உள்ள காளவாய் பொட்டல் பகுதி பாரதியார் தெரு மற்றும் அன்னை தெரசா ஆகிய தெருக்களில் குடிநீர் பகிர்மானக் குழாய் இல்லாததால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் குடிநீர் தேவைக்கு அருகாமையில் உள் வீடுகளிலும், பொது குடிநீர் குழாய்களிலும் குடிநீர் பிடிக்கும் சூழ்நிலை உள்ளது. அதனால் மேற்கண்ட பகுதியில் வசிக்கும் மக்கள் தங்கள் பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய் அமைத்தால் புதிய வீட்டுக் குடிநீர் இணைப்புகள் பெற்றுக்கொள்வதாக தெரிவித்து மனு கொடுத்துள்ளனர். எனவே, மேற்கண்ட பகுதியில் சுமார் 740 மீட்டர் நீளத்திற்கும் மற்றும் வார்டு எண்.19 காவேரி தெரு, வார்டு எண்.14, ராமசாமி தெரு மற்றும் வார்டு எண்.8 சுப்பிரமணியபுரம் 8ம் வீதி சேர்த்து சுமார் 260 மீட்டர் நீளத்திற்கு புதிதாக 90mm பி.வி.சி பகிர்மானக் குழாய் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>குடிநீர் நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.204 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | **12** | 205. இந்நகராட்சியில் நடைபெற்று வரும் உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு என்று தனி அறை இல்லாததால் தற்போது காலியாக உள்ள நகர்மன்ற தலைவர் அறையின் வரவேற்பறையில் தணிக்கை துறை அலுவலர்கள் அமர்ந்து தணிக்கை பணி மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் நகர்மன்ற தலைவர் தேர்தல் நடைபெற்று புதிய தலைவர் வரும்பொழுது மேற்படி அறையை காலி செய்திட வேண்டிய நிலை உள்ளது. எனவே, நகராட்சி அலுவலக வளாகத்தில் கீழ்புறம் உள்ள காலியிடத்தில் நிரந்தரமாக தணிக்கைப் பிரிவுக்கு என்று புதிய கட்டிடம் கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு: பொது நிதியிலிருந்து அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.205 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | 13 | 206. இந்நகராட்சியில் கணிணி அறையில் உள்ள 10 KVA UPS பழுது ஏற்பட்டு செயல்படாமல் உள்ளது. உடனடியாக வருடாந்திர பராமரிப்பு பணி செய்யும் நிறுவனத்தாரால் பார்க்கப்பட்டதில் POWER BOARD, LOGIC BOARD மற்றும் PARALLEL BOARD பழுதாகிவிட்டதாக அறிக்கை வழங்கியுள்ளார். மேற்படி 2009ஆம் ஆண்டு வாங்கப்பட்டுள்ளது. இது மிகவும் பழைய மாடல் என்பதால் அதற்கான உதிரி பாகங்கள் கிடைப்பது சிரமம் என்பதாலும், அப்படியே பாகங்களை மாற்றி பழுது நீக்கி இயங்க வைத்தாலும் எத்தனை மாதங்கள் செயல்படும் என உத்தரவாதம் கொடுக்க இயலாது என்பதால், புதிதாக UPS வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.1,55,000/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அ) பொது நிதியிலிருந்து அனுமதிக்கலாம்.<br>ஆ) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.206 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 14 | 207. காரைக்குடி நகராட்சியின் 2020-2021ஆம் ஆண்டிற்கான உத்தேச திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண்.315/2017/பி2) | **தீர்மான எண்.207 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 15 | 208. இந்நகராட்சி பகுதிகளில் நிவர் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் அவசரகால பயன்பாட்டிற்கு மரங்களை அறுத்து எடுப்பதற்கு வசதியாக TREE CUTTING இயந்திரம் 2 எண்ணம் வாங்குவதற்கு 13.11.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. சீனிவாசா பவர்டூல்ஸ், காரைக்குடி - ரூ.11900/-<br>2. லத்திபா டிரேடர்ஸ், காரைக்குடி - ரூ.12200/-<br>3. பெரிய கருப்பன் பவர் டூல்ஸ் - ரூ.12500/-<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய சீனிவாசா பவர்டூல்ஸ், காரைக்குடி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அ) குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.208 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 16 | 209. இவ்வலுவலக வேலை உத்தரவு கடிதம் ந.க.எண்.1321/2000/இ1 நாள் 16.11.2020ன்படி இந்நகராட்சியின் செஞ்சை பகுதியில் செயல்பட்டு வரும் MICRO COMPOST CENTER-ரில் நிறுவப்பட்டுள்ள குப்பை அரைக்கும் இயந்திரத்தில் ஏற்பட்டிருக்கிற பழுதுகளை M/S LINGA AGRI TRADING MACHINERY PVT LTD, TIRUPUR நிறுவனம் மூலம் சரிசெய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.68008/- M/S LINGA AGRI TRADING MACHINERY PVT LTD, TIRUPUR நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்.209 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக்குறிப்பு:<br>பொது நிதியிலிருந்து அனுமதிக்கலாம். | |
| | **17** | 210. இவ்வலுவலக வேலை உத்தரவு கடிதம் ந.க.எண்.1321/2000/இ1 நாள் 16.11.2020ன்படி இந்நகராட்சியின் கழனிவாசல் பகுதியில் செயல்பட்டு வரும் MICRO COMPOST CENTER-ரில் நிறுவப்பட்டுள்ள குப்பை அரைக்கும் இயந்திரத்தில் ஏற்பட்டிருக்கிற பழுதுகளை M/S LINGA AGRI TRADING MACHINERY PVT LTD, TIRUPUR நிறுவனம் மூலம் சரிசெய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.34196/- M/S LINGA AGRI TRADING MACHINERY PVT LTD, TIRUPUR நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொது நிதியிலிருந்து அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.210**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | **18** | 211. தமிழக தலைமை தேர்தல் அலுவலர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4913/2020-4 தேர்தல் நாள் 01.10.2020ல் தெரிவித்துள்ள அறிவுரைகளின்படி, காரைக்குடி நகராட்சி பகுதியில் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக நடைபெறும் சிறப்பு முகாம் நவம்பர் மாதம் 21.11.2020 மற்றும் 22.11.2020 மற்றும் டிசம்பர் மாதம் 12.12.2020 மற்றும் 13.12.2020 ஆகிய நாட்களில் காரைக்குடி நகராட்சி 36 வார்டுகளுக்குள் உள்ள பொதுமக்கள் புதிய வாக்காளர்கள் சேர்த்தல் படிவம் 6, திருத்தங்கள் மேற்கொள்ள படிவம் 8, முகவரியிலிருந்து வேறு முகவரிக்கு மாற்றம் செய்திட படிவம் 8ஏ மற்றும் இறப்பு, ஊரை காலிசெய்து வேறு ஊர்களுக்கு செல்பவர்கள் ஆகியோர்களுக்கு படிவம் 7 ஆகியவைகளை மேலே கண்டுள்ள தேதிகளில் பொது மக்களிடம் பெற்று அதனை விரைவாக தட்டச்சு செய்திடவும் மற்றும் புகைப்படங்களை பதிவேற்றம் செய்திடவும் மேற்படி தேர்தல் பிரிவில் அவசர தேவைகளுக்கான பொருட்கள் வாங்கிடவும் உத்தேச செலவுத் தொகை ரூ.3,00,000/- (மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.127/2020/சி6) | **தீர்மான எண்.211**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | **19** | 212. இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர், கடித எண் ந.க.எண்.281/2020/அ3 நாள் 23.11.2020ன்படி இந்நகராட்சி வருவாய் உதவியாளர்களான திரு.செ.நாகராஜன் மற்றும் திரு.வி.பாலமுருகன் இருவரும் 30.11.2020 முதல் 24.12.2020 வரை தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் விரிவாக்க பயிற்சியில் கலந்துகொள்ள தெரிவிக்கப்பட்டதின் பேரில், பயிற்சி கட்டணம் 20 நாட்கள் நாள் ஒன்றுக்கு ரூ.1000/- மொத்தம் ரூ.20,000/- வீதம் இரண்டு நபருக்கு ரூ.40,000/ (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அ) அனுமதிக்கலாம்.<br>ஆ) தனி அலுவலரின் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.712/2016/சி1) | **தீர்மான எண்.212**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **20** | 213. காரைக்குடி நகராட்சி சர்வே வார்டு எண்.3, பிளாக் எண்.30, நகரளவு எண்.1032/1ல் அமைந்துள்ள 2 ஏக்கர் 73 சென்ட் (1.1082.0) இடம் நகரளவு ஆவணங்களில் குளம் சர்க்கார் புறம்போக்கு என்ற வகைப்பாட்டில் உள்ள இடத்தில் தனிநபர்கள் வீடுகள் மற்றும் கட்டிடங்கள் ஆக்கிரமித்து கட்டியுள்ளதாகவும் அதனை 4ம் பிரதிவாதி ஆணையர், காரைக்குடி நகராட்சி அவர்கள் அகற்றி உத்தரவிடக்கோரி பி.ஆர்.சுப்பிரமணியன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் WP(MD)NO3486/2020 என எண்ணிட்டு வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கூறிய வழக்கில் பிரதிவாதிகளாக 1. மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை 2. மாவட்ட வருவாய் அலுவலர், சிவகங்கை 3. தாசில்தார், காரைக்குடி ஆகியோரையும் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்கூறிய வழக்கில் நகராட்சி சார்பில் வழக்கினை நடத்திட திரு.பி.மகேந்திரன் அவர்களை கேட்டுக் கொள்ளவும், வழக்கிற்கான மொத்த செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் ஒப்புதலுக்கு. | **தீர்மான எண்.213<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |
| | **21** | 214. காரைக்குடி நகராட்சி செஞ்சை, பாப்பாஊரணி தெற்குபகுதி சர்வே வார்டு எண்.16, பிளாக் எண்.11, டி.எஸ்.எண்.427/10ஏ10 உரிமையாளர் பி.எஸ்.அப்துல்ரஹ்மான் என்பவருக்கும் டி.எஸ்.எண்.427/10ஏ7 உரிமையாளர் திருமதி.சுசிந்திரமேரி என்பவருக்கு 4 அடி பொது பாதை உத்தேசித்து இருந்ததாகவும் ஆனால் சுசிந்திராமேரி 4 அடி பொது பாதையை ஆக்கிரமித்து பாத்ரூம், காம்பவுண்ட் சுவர் மற்றும் கிணறு கட்டியுள்ளதாகவும் அதனை அகற்றி உத்தரவிடக்கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் WP(MD)NO4234/2020ல் 1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 2. மாவட்ட ஆட்சியர், சிவகங்கை 3. ஆணையர், காரைக்குடி 4. தாசில்தார், காரைக்குடி 5. சுசிந்திராமேரி, செஞ்சை ஆகியோர்களை சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கூறிய வழக்கில் நகராட்சி சார்பில் திரு.பி.மகேந்திரன் அவர்கள் ஆஜராகவும் அதற்குரிய வழக்கு கட்டணம் மற்றும் இதர செலவினங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>ஒப்புதல் செய்யலாம்.<br>(ந.க.எண்.4534/2020/எப்2) | **தீர்மான எண்.214<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |
| | **22** | 215. இந்நகராட்சிக்கு சொந்தமான கல்லுக்கட்டி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் செயல்பட்டுவரும் இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் பணி தற்போது துறைமூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. “கொரோனா வைரஸ்” தொற்று நோய் காரணமாக அரசு அறிவித்த பொது ஊரடங்கு காலம் முடிந்து மீண்டும் திறக்கப்பட்டது. மேற்படி இடத்தில் வசூல் பணி மேற்கொள்ள இரண்டு பணியாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு சராசரி ரூ.250/- வீதம் ஒரு மாதத்திற்கு ரூ.7,500/- வசூல் நடைபெற்று வருகிறது. மேற்படி வசூல் பணி பார்க்கும் பணியாளர்களின் மாத ஊதியம் உத்தேசமாக ரூ.50000/- மேல் உள்ளது. தற்போது சரிவர வாகனங்கள் வராததால் மேற்கண்ட இருசக்கர வாகன நிறுத்துமிடத்தை தற்காலிகமாக மூடவும், மேலும் கடந்த மூன்று ஆண்டுகளாக வைப்புத் தொகை கூடுதலாக உள்ளதால் ஏலம் போகமல் உள்ளது. ஏற்கனவே வைப்புத் தொகை ரூ.2,00,000/- என நிர்ணயம் செய்யும் பட்சத்தில் மேற்கண்ட இனம் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி போக வாய்ப்பு இருக்கும் பட்சத்தில் தற்போதுள்ள வைப்புத் தொகை 6,00,000/-ல் இருந்து ரூ.2,00,000/-மாக வைப்புத் தொகையை குறைக்கவும் மன்றம் | **தீர்மான எண்.215<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | பரிசீலித்தும், அனுமதியும் வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4873/2020/அ1) | |
| | 23 | 216. இந்நகராட்சிக்கு சொந்தமான 4 (நான்கு) வாசகசாலைகள், இந்நகராட்சி அலுவலகம் மற்றும் ஆணையர் இல்லத்தில் பயன்படுத்தப்படும் நாளிதழ்கள் விநியோகம் செய்த வகையில் அய்யனார் புக்ஸ்டால், திருமதி.எம்.கல்யாணி மற்றும் தீக்கதிர் திரு.எஸ்.முருகேசன் ஆகியோர்களுக்கு தொகை வழங்க 2020-2021ம் ஆண்டிற்கு உத்தேச செலவினம் ரூ.1,50,000/- (ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4065/2016/எச்3) | **தீர்மான எண்.216**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 24 | 217. காரைக்குடி நகராட்சிக்கு சொந்தமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களும் உரிமையாணைகளும் 01.04.2021 முதல் அல்லது குத்தகை இனங்கள் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு அனுபவிக்கும் உரிமம் கீழ்க்கண்ட விவரப்படி (அ) மட்டும் வரிசை எண்.1 முதல் 8 வரை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டியுள்ளது. எனவே கீழ்க்கண்ட இனங்களுக்கு அதனெதிரில் குறிப்பிட்டுள்ள கலம் எண்.6ல் கண்ட கால அளவிற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஏல அறிக்கை நிபந்தனைகளை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. | **தீர்மான எண்.217**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 25 | **அ) 2021-2024ஆம் ஆண்டுக்கான ஏல அட்டவணை வரிசை எண்.1 முதல் 8 வரை** | **தீர்மான எண்.218**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| வ. எண் | ஏலக் குத்தகை விபரம் | தொடக்க ஏல பொறுப்புத் தொகை ரூ. | கூடுதல் வைப்புத் தொகை ரூ. | சால்வன்சி மதிப்பு ரூ. | உரிமை ஆணை காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | பேரறிஞர் அண்ணா தினசரி நாளங்காடி கடைகளில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 4,00,000 | 4,00,000 | 10,00,000 | 01.04.2021 முதல் 31.03.2024 வரை |
| 2 | இராஜாஜி பேருந்து நிலையத்திற்குள்ளும் மற்றும் புதிய பேருந்து நிலையத்திற்குள்ளும் வந்து | 4,00,000 | 4,00,000 | 15,00,000 | 01.04.2021 முதல் 31.03.2024 வரை |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | செல்லும் பேருந்துகளுக்கு தினசரி நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமை. | | | | | | |
| | | 3 | இந்நகராட்சி கழனிவாசல் சாலையில் அமைந்துள்ள ஆடு அடிக்கும் தொட்டியில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமை. | 2,00,000 | 2,00,000 | 10,00,000 | 01.04.2021 முதல் 31.03.2024 வரை | | |
| | | 4 | இராஜாஜி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள இருசக்கர வாகனம் காப்பகத்தில் தினசா கட்டணம் வசூல் செய்யும் உரிமை. | 2,00,000 | 2,00,000 | 5,00,000 | 01.04.2021 முதல் 31.03.2024 வரை | | |
| | | 5 | இராஜாஜி பேருந்து நிலையத்தில் பூ விற்பனை செய்யும் உரிமை. | 30,000 | 30,000 | 1,00,000 | 01.04.2021 முதல் 31.03.2024 வரை | | |
| | | 6 | நகராட்சி எல்லைக்குள் சாலை ஓரங்களில் தற்காலிகமாக தினசரி சாமான்களை பரப்பி வைத்து பொது மக்களுக்கோ அல்லது காவல் துறையினருக்கோ இடைஞ்சல் இல்லாது ஒழுங்குபடுத்தி விற்பவர்களிடமிருந்து 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 270வது பிரிவின் கீழ் தினசரிக் கட்டணம் வசூல் செய்யும் உரிமை மற்றும் | 10,00,000 | 10,00,000 | 25,00,000 | 01.04.2021 முதல் 31.03.2024 வரை | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பேருந்து நிலையத்தில் பாசி பவளம் விற்பவர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமை. | | | | | | |
| | | 7 | முடியரசன் சாலையில் அமைந்துள்ள நவீன பூங்காவில் தினசரி நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 7,50,000 | 7,50,000 | 20,00,000 | 01.04.2021 முதல் 31.03.2024 வரை | | |
| | | 8 | இந்நகராட்சி கல்லுக்கட்டி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமை. | 1,00,000 | 1,00,000 | 3,00,000 | 01.04.2021 முதல் 31.03.2024 வரை | | |
| | | **ஆ) 2019-2020 முதல் 2021-2022 உடன் முடிவடையும் குத்தகை இனங்கள் (வரிசை எண்.9 முதல் 14 வரை)** | | | | | | | |
| | | 9 | காரைக்குடி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.2 பிளாக் எண்.18, நகரளவை எண்.559 உள்ள வாரச்சந்தையில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமை | 15,00,000 | 15,00,000 | 15,00,000 | **01.04.2022** முதல் அடுத்த மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் விடப்படும் | | |
| | | 10 | இந்நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த இரு சக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | **2000000** | **2000000** | **2500000** | 01.04.2022 முதல் அடுத்த மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் விடப்படும் | | |
| | | 11 | இந்நகராட்சி கோட்டையூர் ரோடு கழனிவாசல் | **750000** | **1000000** | **1000000** | 01.04.2022 முதல் | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சாலையில் நகராட்சி வாரச்சந்தை வளாகத்தில் கட்டப்பட்டள்ள ஒருங்கிணைந்த நவீன மீன் விற்பனைக் கூடத்திற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (48 திறந்தவெளிக் கடைகள்) | | | | அடுத்த மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் விடப்படும் | | |
| | | 12 | நகராட்சி இராஜாஜி பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குமிடத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் ஒலி பெருக்கிகள் மூலம் வர்த்தக விளம்பரம் செய்யும் உரிமை. | 15,000 | 15,000 | 50,000 | 01.04.2022 முதல் அடுத்த மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் விடப்படும் | | |
| | | 13 | மகர்நோன்பு அக்ரஹாரத்தில் அமைந்துள்ள டூரிஸ்ட் டாக்ஸி ஸ்டாண்டில், வாடகை கார்களுக்கும் வேன்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை | 10,000 | 10,000 | 50,000 | 01.04.2022 முதல் அடுத்த மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் விடப்படும் | | |
| | | 14 | புதிய பேருந்து நிலையத்திற்கு வெளியே அமைந்துள்ள வாடகை கார் மற்றும் வேன்களுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 10,000 | 10,000 | 50,000 | 01.04.2022 முதல் அடுத்த மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் விடப்படும் | | |
| | | **இ) 2020-2021 முதல் 2022-2023 உடன் முடிவடையும் குத்தகை இனங்கள் (வரிசை எண்.15 முதல் 19 வரை)** | | | | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 15 | புதிய பேருந்து நிலையத்தில் பூ விற்பனை செய்யும் உரிமை. | 30,000 | 30,000 | 1,00,000 | 01.04.2023 முதல் அடுத்த மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் விடப்படும் | | |
| | | 16 | கல்லுக்கட்டி மேற்கில் அமைந்துள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கட்டண கழிப்பறையில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமை. | 1,00,000 | 1,00,000 | 2,00,000 | 01.04.2023 முதல் அடுத்த மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் விடப்படும் | | |
| | | 17 | கல்லுக்கட்டி வடக்கில் கணபதி பூங்கா அமைந்துள்ள இடத்தில் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமை. | 1,00,000 | 1,00,000 | 2,00,000 | 01.04.2023 முதல் அடுத்த மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் விடப்படும் | | |
| | | 18 | இந்நகராட்சி கழனிவாசல் ஓ.சிறுவயல் சாலையில் உள்ள லாரி மற்றும் மினி லாரிஸ்டான்டுகளிலும் மணல் லாரிக்கு தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமை. | 1,00,000 | 1,00,000 | 2,00,000 | 01.04.2023 முதல் அடுத்த மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் விடப்படும் | | |
| | | 19 | கீழஊரணியில் அமைந்துள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கட்டண கழிப் பறையில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமை. | 1,00,000 | 1,00,000 | 2,00,000 | 01.04.2023 முதல் அடுத்த மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | விடப்படும் |
| **ஈ) நகர்மன்ற தீர்மான எண்.193 நாள் 02.07.2020ன்படி நிரந்தரமாக நீக்கம் செய்யப்பட்ட ஆண்டு குத்தகை இனங்கள் (வரிசை எண்.20 முதல் 22 வரை)** | | | | | |
| 20 | மகர்நோன்பு பொட்டலில் இயங்கி வரும் நகராட்சி விறகு வைக்கோல் வகையறா விற்பனை பேட்டையில் விற்பனை செய்யும் நாட்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் மேற்படி பேட்டையில் விழும் சாணக் கழிவுகளை எடுத்துக் கொள்ளும் உரிமை. | 10,000 | 10,000 | 50,000 | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் |
| 21 | இராஜாஜி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள டூரிஸ்ட் டாக்ஸி நிறுத்தத்தில் நிற்கும் வாடகை கார்களுக்கும் வேன்களுக்கும் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமை. | 10,000 | 10,000 | 50,000 | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் |
| 22 | 100 அடி சாலை மற்றும் கல்லூரி சாலையில் நிற்கும் வாடகை கார்களுக்கும் வேன்களுக்கும் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமை. | 10,000 | 10,000 | 50,000 | ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. அட்டவணை அ, ஆ, இ மற்றும் ஈ-ன்படி பொது ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி ஏல அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும் மற்றும் மாவட்ட அரசிதழில் வெளியிடவும் அதற்கான செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4873/2020/அ1)

| | | | |
|---|---|---|---|
| | | 218. காரைக்குடி நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு பணிகளுக்கு போதிய நிரந்தர துப்புரவுப் பணியாளர்கள் இல்லாததால், 97 துப்புரவுப் பணியாளர்களை வெளிக்கொணர்வு மூலம் 3 ஆண்டுகளுக்கு பணிக்கு அமர்த்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.31962/பி3/2016, நாள்.08.12.2016ல் உத்தரவு வழங்கப்பட்டது. அதன்பேரில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 2018–19ம் ஆண்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட தினக்கூலி விலை விகிதத்தின்படி 97 துப்புரவுப் பணியாளர்களுக்கான ஆண்டு செலவினத் தொகை கணக்கிடப்பட்டு, அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டுத் தொகையை 0.38% குறைவாக கொடுத்த M/s.மதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் கிளியரிங்க ஏஜென்சி, காரைக்குடி நிறுவனத்திற்கு இவ்வலுவலக வேலை உத்திரவு ந.க.எண்.4554/2018/எச்1 நாள்.02.12.2019, 03.12.2019 முதல் 02.12.2020 வரை பணியாளர்கள் சப்ளை செய்திட உத்திரவு வழங்கப்பட்டது. மேலும் ஒப்பந்ததாரர் கடிதத்தில் மேலும் ஓராண்டு நீட்டித்து தர கோரியுள்ளதாலும் , நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவில் தனியார் நிறுவன பணிக்கு 3 ஆண்டுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், அந்நிறுவனத்தின் பணிகள் மற்றும் செயல்பாடுகள் திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் விதிமுறைகளுக்கு உட்பட்டும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அவ்வப்போது அங்கீகரிக்கப்படும் தினக்கூலி விலை விகிதத்தின் அடிப்படையிலும் அடுத்துவரும் ஆண்டுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், அந்நிறுவனத்தின் பணிகள் மற்றும் செயல்பாடுகள் திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் விதிமுறைகளுக்கு உட்பட்டும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அவ்வப்போது அங்கீகரிக்கப்படும் தினக்கூலி விலை விகிதத்தின் அடிப்படையிலும் அடுத்து வரும் ஆண்டுகளுக்கு அந்நிறுவனத்திற்கு தொடர்ந்து பணி உத்திரவு வழங்குவது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்ற நிபந்தனையின் பேரில் மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி நிறுவனத்திற்கான பணிக்காலம் இரண்டாண்டுகள் முடிவடைவதால் இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் திருப்திகராமாக உள்ளதை கருத்தில் கொண்டு மேலும் ஓராண்டு காலத்திற்கு 97 பணியாளர்கள் சப்ளை செய்திடும் பணியை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கிடவும், 2019–2020ம் ஆண்டிற்கான விலை விகிதப்பட்டியலின்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகையில் மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி சதவிகிதத்தை (0.38%) குறைத்து தொகை வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4554/2018/எச்1) | |
| | 26 | 219. காரைக்குடி நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு பணிகளுக்கு போதிய நிரந்தர துப்புரவுப் பணியாளர்கள் இல்லாததால், 97 துப்புரவுப் பணியாளர்களை வெளிக்கொணர்வு மூலம் 3 ஆண்டுகளுக்கு பணிக்கு அமர்த்திக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.31962/பி3/2016, நாள்.08.12.2016ல் உத்தரவு வழங்கப்பட்டது. அதன்பேரில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 2018–19ம் ஆண்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட தினக்கூலி விலை விகிதத்தின்படி 97 துப்புரவுப் பணியாளர்களுக்கான ஆண்டு செலவினத் தொகை கணக்கிடப்பட்டு, அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவில் தனியார் நிறுவன பணிக்கு 3 ஆண்டுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட பணியை தொடர்ந்து மேற்கொள்ள (2019–2020) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள் தினக்கூலி விலை | **தீர்மான எண்.219**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |

விகிதத்தின் அடிப்படையில் **97** பணியாளர்களுக்கான நடப்பு ஆண்டிற்கான செலவுத் தொகை கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

Annual Expenditure for 97 Labours:

| **Particulars** | | **Amount (Rs.)** |
|---|---|---|
| **Salary** | **97Nos x Rs. 385.00 x 365 days day** | **1,36,30,925** |
| ESI @ 3.25% | | 4,43,005 |
| EPF @ 13.16% | | 17,93,830 |
| Life Insurance @ 0.83% | | 1,13,137 |
| Uniform Cost | 97 x 900 | 87,300 |
| Safety Eqwuipments | 97 x 900 | 87,300 |
| Sub-Total | | 1,61,55,497 |
| Other Liable charges and Administrative Charges @ 10% | | 16,15,549 |
| Gross Total | | 1,77,71,046 |

மேற்கண்டவாறு **97** பணியாளர்களை வெளிக்கொணர்வு மூலம் தொடர்ந்து வரும் ஆண்டிற்கு பணிக்கு அமர்த்திடவும், அதற்கான செலவுத் தொகை ரூ.**1,77,71,046/–**க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு:

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.**4554/2018**/எச்**1**)

| | | | |
|---|---|---|---|
| | 27 | 220. காரைக்குடி நகராட்சிக்கு சொந்தமான நான்கு வாசகசாலையில் தற்காலிகமாக பகுதிநேரமாக பணிபுரியும் நான்கு நபர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ஒரு நபருக்கு ரூ.500/- வீதம் (4 x 500 = 2000) மாத ஊதியமும் அதன்படி வருடத்திற்கு 12x200 வீதம் 24,000/- வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு வருடமான 2020-2021ம் ஆண்டிற்கு ஊதியம் வழங்கிட உத்தேச செலவுத் தொகை ரூ.50,000/- (ஐம்பதாயிரம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4065/2016/எச்3) | **தீர்மான எண்.220 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்
காரைக்குடி நகராட்சி